1981 ஆகஸ்ட் 24]

தமிழகத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

*வினா எண் 24—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கு எடுக்கும் பணி நிறைவு பெற்று விட்டதா?

(ஆ) தமிழகத்தின் மக்கள் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பூர்வாங்க முடிவுகளின்படி 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தேதியன்று தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4,82,97,456 ஆகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த 4,82,97,456 பேர்களில் ஆண்கள் எத்தனை பேர்கள், பெண்கள் எத்தனை பேர்கள்? 10 ஆண்டுகளில் எத்தனை சதவீதம் மக்கள் தொகை உயர்ந்து இருக்கிறது? இந்த மக்கள் தொகையிலே இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் எத்தனை சதவீதம் உயர்ந்து இருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர்கள் கடைசியிலே கேட்ட கேள்விக்கு முதலிலேயும் முதலிலே கேட்ட கேள்விக்கு கடைசியிலேயும் பதில் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய இந்தியத் துணைக் கண்டம் மதச் சார்பற்ற அரசாதலால் மதத்தின் அடிப்படையில் சாதியின் அடிப்படையில் மக்கள் தொகை கணக்குகளை கொடுப்பதில்லை. முதல் கேள்விக்கு என்னுடைய பதில், ஆண்கள் 2,44,22,228, பெண்கள், 2,38,77,228. கடந்த 10 ஆண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் தமிழ்நாட்டில் 71 லட்சம். அதாவது நம்முடைய மக்கள் தொகையில் 17.23 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது மக்கள் தொகை அதிகரிப்பிலே தமிழகம் எத்தனையாவது இடத்தை வகிக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மக்கள் தொகையில் ஏழாவது இடத்தில் இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை கணக்கெடுப்பின்பொழுது சாதி வாரியாகவோ, மத வாரியாகவோ எடுக்கப்படுவது வழக்கத்

தில் இல்லை என்று அமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். அப்படியானால் தனித் தொகுதிக்கு மக்கள் தொகை கணிப்பு எப்படி வருகிறது? வரவிருக்கின்ற ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் தனித் தொகுதி ஒதுக்கப்போவதாக அரசு முடிவெடுத்திருப்பதாக அறிகிறோம். அவ்வாறாயின் எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட தொகுதிகள் ஒதுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. டீலிமிடேஷன் கமிட்டி ஒன்று வருகிறது. அது பிரித்துக் கொடுக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பின் பிரகாரம் கடந்த பத்தாண்டுகளில் எப்பொழுதெல்லாம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயற்கையின் காரணமாக வறட்சி ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஆதி திராவிட சமுதாய மக்கள் அந்த ஜில்லாவை விட்டுத் தஞ்சை ஜில்லாவிற்கு வருகிறார்கள். அந்தச் சமயத்தில் கணக்கெடுப்பு நடந்திருக்கிறது. அப்படிப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் மீண்டும் வருங்காலத் தேர்தல்கள் சமயத்தில் மறுபரிசீலனை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தேர்தலுக்கு முன்பு வாக்குப் பதிவு செய்யும் வாக்காளர்கள் என்று கணக்கெடுப்பார்கள். அப்பொழுது டீலிமிடேஷன் கமிட்டி வருகிறபொழுது பரிசீலிப்பார்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுவத்துவதன் காரணமாக மக்கள் தொகை பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. இந்த நிலையில் இந்திய அரசு, தமிழ்நாட்டில் இத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பெறுகின்ற காரணத்தால் ஏதேனும் சிறப்புத் தொகையை வழங்குகிறதா? அல்லது ஏற்கனவே பாராளுமன்றத்தில் ஒரு சீட் குறைந்திருப்பதைப்போல மீண்டும் இந்த அபாயம் ஏற்பட வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அபாயத்தைப்பற்றி என்னால் சொல்ல இயலவில்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் பத்தாண்டுகளில் மக்கள் தொகையில் 24.75 அதி

1981 ஆகஸ்ட் 24]

கரித்திருக்கிறது; ஆனால் தமிழ்நாட்டில் 17.23 அதிகரித்திருக் கிறது. ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தைத் தமிழக அரசு அல்லது தமிழக மக்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. பாராளு மன்றத்தில் ஒரு சீட் குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். ஒரு சீட் அல்ல; முன்பு 41 இடங்கள் நாடாளுமன்றத்தில் இருந்தன; தற்பொழுது அது 39 ஆக ஆகியிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஜே. எஸ். இராசு மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் ஆகியவர்கள் கேட்ட கேள்வி களுக்கு டீலிமிடேஷன் கமிட்டி இதைப்பற்றி ஆராயும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த டீலிமிடேஷன் கமிட்டி ஆராய்வதற்கு 71 ஆவது ஆண்டு எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக்கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்துக்கொள்ளுமா அல்லது இப்பொழுது 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக் கெடுப்பை அடிப்படையாகக் கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர வர்களே, டீலிமிடேஷன் கமிட்டி பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும்- 1981 ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்தில் எடுக்கப் பட்ட கணக்கின் அடிப்படையில் டீலிமிடேஷன் கமிட்டி வரும்.

மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடுகட்டும் திட்டம்

*வினா எண் 25 திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மன்னார்குடியில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3 ஆம் நாளன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் சர்வே எண் 3786, 3787 மற்றும் 3789 இல் உள்ள 8 ஏக்கர் 79 செண்ட் பரப்பளவுள்ள நிலம் 1979 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு ஊழியர்